**2013 වර්ෂය සඳහා**
**ජනලේඛන හා සංඛ්‍යාලේඛන දෙපාර්තමේන්තුවේ**
**කාර්ය සාධන වාර්තාව**

**ඩී. සී. ඒ. ගුණවර්ධන**
**අධ්‍යක්ෂ ජනරාල්**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின்
**2013** ஆம் ஆண்டுக்கான
செயலாற்றுகை அறிக்கை

டீ. சி. ஏ. குணவர்தன
பணிப்பாளர் நாயகம்

# PERFORMANCE REPORT OF THE DEPARTMENT OF CENSUS AND STATISTICS FOR THE YEAR 2013

**D. C. A. Gunawardena**
**DIRECTOR GENERAL**

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களமானது இலங்கையின் தேசிய புள்ளிவிபர நிறுவனமாக விளங்குவதுடன் அரசாங்கத்துக்குத் தேவையான புள்ளிவிபரத் தரவுகள் சேகரித்தல், பரம்பல் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் தரவுப் பாவனையாளர்களிற்கு புள்ளிவிபரத் தரவுகளை வழங்குதல் என்பவற்றுக்கு பிரதானமாக பொறுப்புடையதாகவும் விளங்குகின்றது. நாட்டின் பல்வேறு துறைகளின் சமூகப் பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவுகளை சேகரித்தல், வழங்குதல் ஆகியன அடங்கலாக, புள்ளிவிபர சேவைகள் தேவைப்படும் சகல அரச முகவரகங்களிற்கும் தொழில் சார் அலுவலர்களைப் பயிற்றுவித்து, பணிக்கமர்த்தலும் அதன் பணியாகும். அத்துடன் புள்ளிவிபர விடயங்கள் தொடர்பில் உதவி தேவைப்படும் முகவரகங்களிற்கு அதன் தொழிநுட்ப பிரிவுகளினுடாக புள்ளிவிபர ஆலோசனைச் சேவைகளையும் வழங்குகிறது.

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டமை காரணமாக இவ்வாண்டு விசேடமாகப் பாரட்டப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் ஆரம்பித்த செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் 2013 இன் குறித்த இலக்குகளை அடைய, திணைக்கள அலுவலர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய, அயரா உழைப்புடனான சேவையையும் மிகவும் பாராட்டுகிறேன். திணைக்களத்தின் இலக்கினை நிறைவேற்ற தங்கள் ஒத்துழைப்பை வழங்கிய அரச, தனியார் நிறவனங்கள், ஏனைய அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



டீ. சி. ஏ. குணவர்தன
பணிப்பாளர் நாயகம்

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
த.பெ.இலக்கம் 563,
கொழும்பு.

தொலைபேசி : +94 11 2147001
பக்ஸ் : +94 11 2147010
மின் அஞ்சல் : dgcensus@sltnet.lk
இணையத்தளம் : www.statistics.gov.lk

# உள்ளடக்கம்


**1. அறிமுகம்**

**2. திணைக்களத்தின் செயற்பாடுகள்**

**2.1 திணைக்களத்தால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்**

2.1.1 குடிசன வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2011/2012
2.1.2 பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/2014
2.1.3 மோதல் காரணமாக இடம்பெயர்ந்தோர் சம்பந்தமான தொகைமதிப்பு - 2013
2.1.4 நெல் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்கான அளவீடு
2.1.5 தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திச் செலவினம் சம்பந்தமான அளவீடு
2.1.6 கைத்தொழில்களின் வருடாந்த அளவீடு - 2013
2.1.7 கைத்தொழில் உற்பத்தி சம்பந்தமான காலாண்டு அளவீடு
2.1.8 நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான வருடாந்த அளவீடு - 2013
2.1.9 இலங்கைத் தொழிற்பல அளவீடுகள்
2.1.10 குடித்தன வருமான , செலவின அளவீடு - 2012/2013

**2.2 இலங்கையின் சமூகப் பொருளாதார நிலைமைகளை அளவிடுவதற்காக திணைக்களத்தால் நடாத்தப்படும் வேறு புள்ளிவிபர வேலைகள்**

2.2.1 நெற் புள்ளிவிபரம்
2.2.2 உணவு ஐந்தொகைத்தாள்
2.2.3 மேட்டுநிலப் பயிர்கள், கால்நடைகளின் புள்ளிவிபரங்கள்
2.2.4 இலங்கைத் தேசிய கணக்குகள்
2.2.5 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2006/07 = 100)
2.2.6 உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (உ.வி.சு)
2.2.7 சில்லறை விலைகளும் உற்பத்தியாளர் விலைகளும்
2.2.8 அரச சார்புத்துறை வேலைவாய்ப்புப் புள்ளிவிபரங்கள்
2.2.9 புள்ளிவிபரப் பயிற்சி நடவடிக்கைகள்
2.2.10 தகவல் தொடர்பாடற் தொழில்நுட்பவியல் நடவடிக்கைகள்
2.2.11 வெளியீட்டு நடவடிக்கைகள்
2.2.12 அச்சிடல் நடவடிக்கைகள்
2.2.13 வரைப்பட நடவடிக்கைகள்
2.2.14 தரவுப் பரம்பல் நடவடிக்கைகள்
2.2.15 நூலகம்

2.2.16 வெளிக்கள முகாமைத்துவ நடவடிக்கைகள்

**2.3 சில அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் அமைந்துள்ள , திணைக்களத்தின் கிளை அலுவலகங்களால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்**

2.3.1 வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு

2.3.2 சராசரி உழைப்புக்கள் ,வேலை நேரங்கள் சம்பந்தமான அளவீடு.

2.3.3 கல்விப் புள்ளிவிபரங்கள்

2.3.4 வைத்தியப் புள்ளிவிபரங்கள்

2.3.5 வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள்

2.3.6 கடற்றொழில் புள்ளிவிபரங்கள்

2.3.7 ஆகக் குறைந்த கூலிவீதச் சுட்டெண்

2.3.8 தொழிற் புள்ளிவிபரங்களின் பரம்பல் - 2013

2.3.9 சுங்கப் புள்ளிவிபரங்கள்

**3. நிர்வாகம்**

**3.1 பிரதான பிரிவுகள் , கிளை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்**

3.1.1 பிரிவுகளும் அலகுகளும்

3.1.2 அமைச்சுக்கள் , திணைக்களங்களில் உள்ள கிளை அலுவலகங்கள்

3.1.3 மாவட்ட அலுவலகங்கள்

3.1.4 மாகாண சபைகளில் உள்ள புள்ளிவிபர ஆளணியினர்

**3.2 ஆளணியினர்**

**3.3 மாநாடுகள் , கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றில் பங்குபற்றியோர் - 2013**

**3.4 பதவி உயர்வுகள் , புதிய நியமனங்கள் , விடுவுப்புகள் , பதவி விலகல்கள் , பதவி வெறிதாக்கல்கள் மற்றும் இளைப்பாறல்கள்**

**3.5 உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்**

**4. நிதி அறிக்கை - 2013**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2013

## 1. அறிமுகம்

இந்த நாட்டின் சமூக, பொருளாதார நிலமைகள் சம்பந்தமான தரவுகளைச் சேகரித்தல், சீர்முறைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், வெளியிடல், புள்ளிவிபரக் குறிகாட்டிகளைக் கணித்தல் ஆகிய பொறுப்புக்கள் மத்திய அரசாங்க முகவர் நிலையமான தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தைச் சார்ந்தது. அரசாங்கத்தின் தேசிய திட்டமிடல், கொள்கை வகுத்தல் போன்றவற்றிற்கும் இவற்றின் முன்னேற்றங்களை மதிப்பிடல் போன்றவற்றிற்கும் தேவையான தகவல்களைத் தொடர்ந்து இத்திணைக்களம் வழங்குகின்றது. மேலும் இத்திணைக்களம் தான் நடாத்தும் தொகைமதிப்புகள், மாதிரி அளவீடுகளை உள்ளடக்கி வேறுபட்ட மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட பலதரப்பட்ட தகவல்களை உள்ளூர், வெளியூர் முகவர் நிலையங்களின் தேவைகளுக்கு தொடர்ந்து வழங்கி வருகின்றது. சேகரிக்கப்பட்ட இத்தரவுகள் சனத்தொகை, விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், விலைகள், தேசிய வருமானம் போன்ற விடயங்களை உள்ளடக்குகின்றன.

### தொலைநோக்கு

நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை எய்தும் பொருட்டு, புள்ளிவிபரத் தரவுகளை துரிதமாக வழங்குவதில் பிராந்தியத்தின் முன்னோடியாக திகழ்தல்.

### செயல்நோக்கு

உலகச் சூழலில் வளமிக்க நாடொன்றை உருவாக்கும் பொருட்டு, தந்திரோபாய தலைமையின் கீழ் அர்ப்பணம் மிகு அலுவலர்களின் சேவைப் பயன்பாடு, மற்றும் புதிய தொழில்நுட்பம் என்பவற்றின் மூலம் வினைத்திறன் மிக்க முறையில் புள்ளிவிபரங்களை சரியாகவும், துரிதமாகவும் வழங்கி, நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்குதலே இதன் செயல் நோக்காகும்.

## 2. திணைக்களத்தின் செயற்பாடுகள்

இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் பின்வரும் மூன்று பரந்த பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன.

2.1 திணைக்களத்தால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்.

2.2 நாட்டின் சமூகப் பொருளாதார நிலமைகள் சம்பந்தமான தரவு சேகரித்தல், கணித்தல் தொடர்பாக திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய புள்ளிவிபர வேலைகள்.

2.3 சில அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் அமைந்துள்ள, திணைக்களத்தின் கிளை அலுவலகங்களால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்.

## 2.1 திணைக்களத்தால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்

### 2.1.1 குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2011/ 2012

2012 இல் நடைபெற்ற இறுதிக் கட்டத்தில் தொகைமதிப்புத் தகவல்கள் பெற்றுக் கொள்ளுதல், மற்றும் திருத்த நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்த பின்னர் சகல படிவங்களினதும் சரி பார்த்தல் மற்றும் ஸ்கானிங் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

அதன் பின்னர் ஸ்கானிங் செய்யப்பட்ட தரவுக் கோப்புகளிலுள்ள தரவுகள் சரிபார்க்கப்பட்டு, பதிப்பித்தல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டது. பதிப்பிக்கப்பட்ட தரவுக் கோப்புகளில் தொழில், கைத்தொழில் மற்றும் தொழில்சார் தகைதைக்குரிய குறியீடல் 50% அளவில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. 2011 குடிசன, வீட்டுவசதித் தொகைமதிப்புக்குரிய சகல நிரற்படுத்தல் படிவங்களினதும் (F1 படிவங்கள்) ஸ்கானிங் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தொகைமதிப்பின் 5% மாதிரித் தரவுகளைப் பயன்படுத்தி குடிசன, வீட்டுவசதித் தரவுகளின் அட்டவணைகள் தயாரிக்கப்பட்டதுடன் அவ்வட்டவணைகள் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. 5% மாதிரி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

### 2.1.2 பொருளாதாரத் தொகைமதிப்பு 2013/2014

**கைத்தொழிற் தொகைமதிப்பு**

இலங்கையிலுள்ள கைத்தொழில், வர்த்தக, சேவைகள் பிரிவுகளின் நிரற்படுத்தல் வேலைகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளது. தொகைமதிப்புத் தகவல்கள் பெற்றுக் கொள்ளும் கட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தரவுப் பாவனையாளர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக பயிற்சிப்பட்டறை நடத்துதல், வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுதல்,நிதி மதிப்பீட்டுச் சட்டகத்தை அமைத்தல், தரவு அட்டவணைகளுக்காக மhjதிரிப் படிவங்கள் தயாரித்தல் மற்றும் பொருளாதாரத் தொகைமதிப்பின் கைத்தொழில், வர்த்தக, சேவைகள் பிரிவின் கணக்கெடுத்தற் கட்டத்துக்கு வினாக்கொத்துக்களைத் தயாரிப்பதற்காக உரிய அடிப்படைப் படிவங்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் என்பன இவ்வருடத்தினுள் பூர்த்தி செய்யப்பட்டது.

**விவசாயத் தொகைமதிப்பு**

மேற்படி தொகைமதிப்பிற்கு ஏற்ப, இலங்கையிலுள்ள 20 ஏக்கருக்கு மேற்பட்ட தோட்டங்களை நிரற்படுத்துதல் மற்றும் அதன் அடிப்படையில் அறிக்கை வெளியிடுதல் என்பன இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டதுடன் தொகைமதிப்பு வினாக்கொத்துக்களை ஸ்கானிங் செய்வதற்கு ஸ்கானிங் இயந்திரங்களை விலைக்கு வாங்குதல் மற்றும் ஸ்கானிங்குக்குத் தேவையான ஸ்கானிங் நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு உரிய நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் என்பன தற்போது பூர்த்தியடைந்துள்ளது.

### 2.1.3 மோதல் காரணமாக இறந்த/ காயமடைந்தோர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் சம்பந்தமான தொகைமதிப்பு 2013

மேற்படி தொகைமதிப்பு 2013 தொடக்கத்தில் திட்டமிடப்பட்டு, பின்னர் ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டில் சாந்தியை நிலைநிறுத்தவும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலையும் நோக்காகக் கொண்டு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய, இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் காரணமாக ஏற்பட்ட சேதங்கள் சம்பந்தமான தொகைமதிப்பை நடத்தி தகவல்களைத் திரட்டுமாறு பரிந்துரை செய்யப்பட்டமையால் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்கள஌ும் அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சும் இணைந்து மேற்படி தொகைமதிப்பை நடத்தியது. இ;தொகைமதிப்பின் சகல தொழில்நுட்ப நடவடிக்கைகளும் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டதுடன் அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த சகல வேலைகளும் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்த பிரிவு ஒன்றினால் தொடர்ச்சியாக மேற்பார்வையிடப்பட்டது.

இத்தொகைமதிப்பின் திட்டமிடல், களநடவடிக்கைகள் 2013 பெப்ரவரியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதுடன் நவம்பர் 25ஆம் திகதியளவில் தொகைமதிப்பின் களவேலைகள் (தரவு சேகரித்தல்) பூர்த்தி செய்யக் கூடியதாயிருந்த்து. தொகைமதிப்பின் கள நடவடிக்கைகள் முடிவுற்றதும் தரவு சேகரித்த படிவங்களைத் தலைமை அலுவலகத்திற்குக் கொண்டு வருதல், 2013.12.27ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. தரவுகளைப் பதிப்பித்தல், கணனி மயப்படுத்தல், ஆரம்ப அறிக்கை, இறுதி அறிக்கை தயாரித்தல் என்பன 2014 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.1.4 நெல் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்கான அளவீடு

நெல் விளைச்சலை மதிப்பீடு செய்வதற்கான அளவீடு, ஆண்டுக்கு இரு முறை மேற்கொள்ளப்பட்டதுடன் 2012/13 பெரும்போகம், 2013 சிறுபோகம் என்பன இவ்வருடத்துக்குரியனவாகும். 2012/13 பெரும்போகத்திற்குரிய மாவட்ட அறிக்கையிலிருந்து இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதுடன் 2013 சிறுபோக நெல்விளைச்சல் சம்பந்தமான தற்காலிக அறிக்கை தயாரிக்கத் தேவையான நடவடிக்கைகளும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. **தேயிலை, இறப்பர்,**

### 2.1.5 தேங்காய்களின் உற்பத்திச் செலவின அளவீடு

2012/2013 வருடத்திற்கான தேயிலை, இறப்பர், தேங்காய்களின் உற்பத்திச் செலவை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான தரவுகள், உரிய நிறுவனங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது. இத்திணைக்களத்திலிருந்து பெற்ற மாதிரிகைகமைய பெறப்பட்ட தரவுகள் கணிப்பிடப்பட்டன. ஒரு கிலோ கிராம் தேயிலையின் உற்பத்திச் செலவு கணிப்பதற்கு உரிய விரிவான தகவல்கள், இலங்கைத் தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்டதுடன் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையில் இறப்பரின் உற்பத்திச் செலவீனம் கணிக்கப்பட்டது. தேங்காய்களின் உற்பத்திச் செலவினம் கணிக்கத் தேவையான தகவல்களும் வெளிக்கள அளவீடொன்றின் மூலம் சேகரிக்கப்பட்டது. தற்போது பூர்த்தி செய்யப்பட்ட வினாக்கொத்துக்கள் ஒவ்வொரு நிறுவனங்களிடமிருந்தும் மாவட்ட அலுவல்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

### 2.1.6 கைத்தொழில்களின் வருடாந்த அளவீடு - 2013

இவ் அளவீட்டுத் திட்டமானது சுரங்கமறுத்தல், கற்பார் தோண்டல், உற்பத்திக் கைத்தொழில், மின்சாரம், வாயு, நீர்விநியோகம் சம்பந்தமான பொருளாதார முயற்சிகளை உள்ளடக்குகிறது. 25 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்கள் முற்றாக அளவீட்டுக்கு எடுக்கப்பட்டன. அத்துடன் 5-24பேர் ஈடுபடும் நிறுவனங்களிலிருந்து பெற்ற மாதிரி ஒன்று இங்கு பயன்படுத்தப்படுகின்றது.
2012 இன் அளவீட்டுக்கான தரவுகள் பதிப்பித்தல், குறியீடிடல், கணனிப்படுத்தல் வேலைகள், இவ்வருடத்துக்கான வினாக்கொத்துக்கள், அறிவுறுத்தல்கள் தயாரித்தல் மற்றும் அவற்றை அச்சிடுதல், மாதிரி தெரிவு செய்தல், பெரிய நிறுவனங்களுக்கு வினாக்கொத்துக்களுடன் ஏனைய படிவங்களையும் தபாலில் அனுப்புதல் ஆகிய நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

### 2.1.7 கைத்தொழில் உற்பத்தி சம்பந்தமான காலாண்டு அளவீடு.

உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி மட்டம், மூலப்பொருள் நுகர்வு, வருவாய், தொழில் அமர்வு உற்பத்தி போன்றவற்றின் அண்மித்த விபரங்களைப் பெறும் பொருட்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது. 2012 இன் இறுதிக் காலாண்டின் கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வளர்ச்சி வீதம் கணிக்கத் தேவையான நடவடிக்கைகளும் தேசிய கணக்குகள் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது.

### 2.1.8 வருடாந்த நிர்மாணக் கைத்தெழில் சம்பந்தமான அளவீடு - 2013

1994 இலிருந்து வருடாந்தம் நடாத்தப்படும் இவ்வளவீட்டின் நோக்கம், நிர்மாணக் கைத்தெழிற் துறையின் அடிப்படைத் தகவல்களை வழங்குதலாகும். ICTAD நிறுவனத்தில் பதிவு செய்த ஒப்பந்தக்கார்ர்களின் பெயர்ப் படிவத்திலிருந்து மாதிரி தெரிவு செய்தல், நிர்மாணக் கைத்தொழில் நிறுவனங்களுக்கு வினாக் கொத்துக்களைத் தபாலில் அனுப்புதல் மற்றும் களநடவடிக்கைகளில் பூர்த்தி செய்யப்பட்ட வினாக்கொத்துக்களைப் பெற்று ஒழுங்கு முறையில் குறியீடிடல், பதிப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

### 2.1.9 இலங்கை தொழிற்பல அளவீடு

இலங்கைத் தொழிற்பல அளவீடானது, இலங்கையின் தொழிற்பலம், வேலைவாய்ப்பு, வேலையற்றோர் என்பவற்றின் போக்கினையும் மட்டங்களையும் அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்டது, இது 1990 முதற் காலாண்டிலிருந்து காலாண்டு ரீதியாக நடாத்தப்பட்டு வருகிறது. இவ்வளவீடு தேசிய மட்ட மதிப்பீடுகளை காலாண்டு ரீதியிலும் மாவட்ட மட்ட மதிப்பீடுகளை வருடாந்த ரீதியிலும் வழங்குகிறது.

குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பின் காரணமாக 2012 இன் முதலாம் காலாண்டு அளவீடுகள் மேற்கொள்ளப்படாததுடன் ஏனைய மூன்று காலாண்டுகளின் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை: 1 : இலங்கை தொழிற்பல அளவீடு 2012**

| குறிகாட்டி | இலங்கை | ஆண் | பெண் |
|---|---|---|---|
| தொழிற்பலம் (10 வயதும் அதற்கு மேலும்) ('000) | 8,465 | 5,637 | 2,828 |
| தொழிற்பலப் பங்களிப்பு வீதம் (%) | 47.2 | 66.8 | 29.9 |
| தொழில் புரிவோர் ('000) | 8,129 | 5,477 | 2,652 |
| வேலைவாய்ப்பு வீதம் (%) | 96.0 | 97.2 | 93.8 |
| வேலையற்றோர் ('000) | 336 | 160 | 176 |
| வேலையற்றோர் வீதம் (%) | 4.0 | 2.8 | 6.2 |

அத்துடன் 2013 இன் முதலாம் காலாண்டுக்கான ஆங்கில அறிக்கையும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

### 2.1.10 குடித்தன வருமான, செலவின அளவீடு 2012/13

தேசிய குடித்தன அளவீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடித்தன வருமான, செலவின அளவீடு இத்திணைக்களத்தால் 3 மூன்று வருடங்களுக்கொரு முறை நடத்தப்படுகிறது. இவ் அளவீட்டுத் தொடரின் எட்டாவது அளவீட்டின் கள நடவடிக்கைகள் 2012 யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2013 யூனை மாதம் நிறைவு செய்யப்பட்டது.

இது நாடளாவிய ரீதியில் 12 மாதச்சுற்றுக்களில் மேற்கொள்ளப்படுகிறது. தகவல்கள் பெறும் படிவம் 9 பிரிவுகளைக் கொண்டதுடன் மக்களியல், பாடசாலைக் கல்வி, சுகாதாரம்,குடித்தன வருமான, செலவீனம், வீட்டுக்கூறிலுள்ள நீடித்துழைக்கும் பொருட்கள், அடிப்படை வசதி, குடித்தனத்தின் கடன் தன்மை, வீட்டு ஆரோக்கியம் இயற்கை அனர்த்தம், காணி உரிமை, கால்நடை என்பன சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இம்முறை அளவீட்டுக்குப் பெற்ற தகவல்களின் சமூகப் பாதுகாப்புச் சுட்டெண் கணித்தலுக்குத் தேவையான தரவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வளவீட்டின் முதல் மூன்று மாதங்களின் தரவுகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஆரம்ப அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2 : குடித்தன வருமான, செலவின அளவீடு - 2012/13**

| சுட்டெண் | அலகு | பெறுமதி |
|---|---|---|
| குடித்தனங்களின் மாதாந்த இடைய வருமானம் | ரூபா | 46,207 |
| குடித்தனங்களின் மாதாந்த இடைய வருமானம் | ரூபா | 30,400 |
| குடித்தனங்களின் மாதாந்த தனிநபர் இடைய வருமானம் | ரூபா | 11,932 |
| வருமானம் ஈடுபட்டவர்களின் மாதாந்த குடித்தன இடைய வருமானம் | ரூபா | 25,778 |
| குடித்தன வருமான கினிக் குணகம் | - | 0.48 |
| மாதாந்த குடித்தன சராசரிச் செலவு | ரூபா | 40,887 |
| உணவுக் குணகம் | % | 39.40 |
| வறுமைச் சுட்டெண் | % | 6.50 |

## 2.2 இலங்கையின் சமூக பொருளாதார நிலமைகள் சம்பந்தமாக தரவு சேகரித்தல், கணித்தல் சம்பந்தமாக திணைக்களத்தால் நடாத்தப்படும் வேறு புள்ளிவிபர வேலைகள்.

### 2.2.1 நெற் புள்ளிவிபரம்

நாட்டின் சகல நெற் காணிகளின் கணக்கெடுப்பும் நீர்ப்பாசன முறைப்படியும் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகவும் பிரதேசச் செயலாளர் பிரிவு ரீதியாகவும் நடாத்தப்பட்டது. 2012/2013 பெரும்போகம், 2013 சிறுபோகம் என்பன தொடர்பில் பண்படுத்தப்பட்ட, விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட பரப்பு சம்பந்தமான பெறுமானங்கள் கணிக்கப்பட்டன. 2012/2013 பெரும்போகத்துக்கான நெல் அறுவடை சம்பந்தமான இறுதி அறிக்கை திணைக்கள இணையத்தில் வெளியிடப்பட்டதுடன் 2013 சிறுபோகத்துக்கான தற்காலிக அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

### 2.2.2 உணவு ஐந்தொகைத்தாள்

வருடாவருடம் தயாரிக்கப்படும் உணவு ஐந்தொகைத் தாளானது தேசிய அளவிலான போசாக்கு நிலையைப் பிரதிபலிப்பதுடன் நாட்டில் ஒவ்வொருவருக்கும் பெறக்கூடியதாக உள்ள உணவு மட்டத்தையும் காட்டுகிறது. 2012 இற்கான உணவு ஐந்தொகைத்தாள் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

### 2.2.3 மேட்டுநிலப் பயிர்கள் மற்றும் கால்நடைகளின் புள்ளிவிபரங்கள்

2012/2013 பெரும்போகத்தின் போதான மேட்டு நிலப் பயிர்களின் புள்ளிவிபரங்களுக்கான இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு தரவுப் பாவனையாளர்களுக்கு வழங்குதல் மற்றும் 2013 சிறுபோகத்தில்ஒவ்வொரு பயிர்களுக்கும் பெறுமானம் கணித்தல் என்பன பூர்த்தியடைந்துள்ளன.

அத்துடன் 2013 சிறுபோகத்தில் உருளைக் கிழங்கு அறுவடை சம்பந்தமான அளவீட்டின் இறுதி அறிக்கையும் பெரிய வெங்காயம் அறுவடை சம்பந்தமான அளவீட்டின் இறுதி அறிக்கையும் வெளியிடப்பட்டது.

### 2.2.4 தேசிய கணக்குகள்

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை தேசிய கணக்குகள் கணிப்பதற்கு பொறுப்பாக உள்ளது. இதற்கமைய வருடார்ந்த தேசிய கணக்குகள் மதிப்பிடலில் உற்பத்திச் செலவினம் மற்றும் வருமான அணுகு முறைகள் பயன்படுத்தப்படுகிறது.

காலாண்டு, வருடாந்த கணக்குகள் மதிப்பிடலில் உற்பத்தி அணுகுமுறை பயன்படுத்தப்படுகின்றது தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் கணித்தலுக்கு தேவையான தரவுகள் இலங்கை மத்தியவங்கி, இலங்கை சுங்கம், பொதுத் திறைசேரி, ஏனைய அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் திணைக்களத்தின் சொந்த தரவு வளங்கள் என்பவற்றிலிருந்து சேகரிக்கப்படுகின்றன.

தேசிய கணக்குகள் மதிப்பீட்டின் வருடார்ந்த விரைவு மதிப்பீடுகள் மற்றும் காலாண்டு வருடாந்த கணக்கு மதிப்பீடுகள் என்பன குறித்த காலாண்டு வருடம் பூர்த்தியடைந்து 75 நாட்களில் பிரசுரிக்கப்படுகின்றன. இதற்கமைய 2012ன் வருடாந்த, 4வது காலாண்டு, 2013ன் 1ம், 2ம், 3ம் காலாண்டுகளுக்கான காலாண்டு தேசிய கணக்குகள், கணிக்கப்பட்டன. தேசிய கணக்குப்பெறுமானங்கள் வழமை போன்று ஊடகத்தினூடாகவும் திணைக்கள உத்தியோக பூர்வ இணையத்திலும் வெளியிடப்பட்டன.

2013 இல் வெளியிடப்பட்ட தேசிய கணக்குகள் சம்பந்தமான மதிப்பீடுகள், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, ஐக்கிய நாடுகள், உலக வங்கி மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு முகவரகங்களிற்கும் இவ்வாண்டுப்பகுதியில் வழங்கப்பட்டது.

"வருடாந்த வெளியீடான 'இலஙகைத் தேசிய கணக்குகள்' - 2012" 2013 ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இது வெளியீட்டுத்தொடரில் 39 வதாகும்.

**அட்டவணை 3 : வருடாந்த தெசிய கணக்கு மதிப்பீடுகளின் பிரதான சுட்டெண்**

| சுட்டெண் | 2011 | 2012* |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (%) | 8.2 | 6.4 |
| தனிநபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா) | 313,576 | 373,001 |
| தனிநபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ.டொலர்) | 2,836 | 2,923 |
| தனிநபரின் மொத்த தேசிய வருமானம் (ரூபா) | 310,124 | 365,699 |
| தனிநபரின் மொத்த தேசிய வருமானம் (அ.டொலர்) | 2,805 | 2,866 |
| தனிநபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ.டொலர்) வளர்ச்சி (%) | 18.2 | 3.1 |
| தனிநபரின் மொத்த தேசிய வருமானம்(அ.டொலர்) வளர்ச்சி (%) | 15.7 | 17.9 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்கமாக விலைச்சுட்டெண்(2002=100) | 228.5 | 248.8 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உட்கிடை விலைச் சுட்டெண்ணின்படி பணவீக்கம் (%) | 7.9 | 8.9 |

*தற்காலிகமானது

## 2.2.5 கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் - (அடிப்படை 2006/07=100)

புதிய, நம்பகரமான நுகர்வோர் விலை மாற்றங்களின் சுட்டெண் ஒன்றுக்கான தேவையை உணர்ந்து, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமானது, யூன் 2011 இல் புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை உருவாக்கியது.

இப் புதிய சுட்டெண், குடித்தன, வருமான, செலவின அளவீடு - 2006/07 இன் அடிப்படையிலும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் அடிப்படை 2006/07=100 இன் போக்கிலும் உள்ளது. இது கொழும்பு மாவட்டத்திலுள்ள சகல நகரக் குடித்தனங்களையும் உள்ளடக்குகிறது. நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது சாதாரணமாக நுகர்வுப் போக்கிலுள்ள மாற்றங்களைப் பிரதிபலிக்கும் வகையில் ஆகக் குறைந்தது 5 - 10 வருடங்களுக்கொரு முறையாவது அதன் அடிப்படை நிறையை மீளாய்வு செய்யப்படவே தேவைப்படுகின்றது. விலை சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை முன்னர் 12 ஆக இருந்தது. தற்போது 14 ஆக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அவையாவன: புறக்கோட்டை, மருதானை, வெள்ளவத்தை, தெமட்டகொட, கொம்பனித்தெரு, பொரளை, கிருளப்பனை, கோட்டை, தெஹிவளை, கோட்டை, நுகேகொட,


கொலன்னாவ, ரத்மலானை மற்றும் நாரஹேன்பிட்டி, ரத்மலானவிலுள்ள இரு பொருளாதார மத்திய நிலையங்கள் என்பனவாகும்.

இப்புதிய சுட்டெண்(2006/07=100) பழைய கொ.நு.வி.சு (அடிப்படை 2002=100) இற்கு மாற்றீடாக யூன் 2011 இலிருந்து இலங்கையின் உத்தியோகபூர்வ பணவீக்க அளவீடாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**அட்டவணை 4 : கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மாறிகள் 2012/2013**

| வருடம் | மாதம் | சுட்டெண் | பணவீக்கம் (வருடத்திற்கு வருடம்) |
|---|---|---|---|
| **2012** | ஜன. | 154.8 | 3.8 |
| | பெப். | 155.4 | 2.7 |
| | மார்ச் | 158.8 | 5.5 |
| | ஏப். | 159.8 | 6.1 |
| | மே | 162.1 | 7.0 |
| | யூன் | 165.2 | 9.3 |
| | யூலை | 166.7 | 9.8 |
| | ஓக. | 165.7 | 9.5 |
| | செப். | 165.5 | 9.1 |
| | ஒக்ரோ. | 165.0 | 8.9 |
| | நவம்பர் | 167.1 | 9.5 |
| | டிசம்பர் | 168.6 | 9.2 |
| **2013** | ஜன. | 170.0 | 9.8 |
| | பெப். | 170.7 | 9.8 |
| | மார்ச் | 170.8 | 7.5 |
| | ஏப். | 170.0 | 6.4 |
| | மே | 173.9 | 7.3 |
| | யூன் | 176.5 | 6.8 |
| | யூலை | 176.8 | 6.1 |
| | ஓக. | 176.2 | 6.3 |
| | செப். | 175.8 | 6.2 |
| | ஒக்ரோ. | 176.1 | 6.7 |
| | நவம்பர் | 176.5 | 5.6 |
| | டிசம்பர் | 176.5 | 4.7 |

**வரைபு 1 - கொழும்பு நுகர்வோர் விலைச்** சுட்டெண் (அடிப்படை **2006/07 = 100)**



### 2.2.6 உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் (உ.வி.சு)

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் விலைகள் பிரிவின் ஊடாக பிரதான விவசாயப் பொருட்களின் விலைகள் சேகரிப்பு மாதாந்தம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை இது தொடர்பில் எவ்வித சுட்டெண் கணிப்பீடும் மேற்கொள்ளப்படவில்லை. நாடளாவிய ரீதியில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளின் விலை மாற்றம் சம்பந்தமான ஆய்விற்கு உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் மிகவும் முக்கியமானதாகும்.

2012 இல் விவசாயப் பிரிவிற்காக உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் சேகரிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் 2013 இல் அது பரீட்சார்ந்த அடிப்படையில் கணிப்பிடப்பட்டது.

2013 இன் முதல் ஆறு மாதங்களில் இப்பிரிவிற்கு வருகை தந்த சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசகர் ஒருவரினால் இவ்விடயம் தொடர்பில் கவனஞ் செலுத்தப்பட்டதுடன் உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் கணித்தலுக்கான ஆலோசனையும் வழங்கப்பட்டது. இங்கு உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணுக்கான உள்ளடக்கத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான பின்னணி பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் திணைக்களம் தற்போது சேகரித்துவரும் உற்பத்திக் கைத்தொழில் மற்றும் பயன்பாட்டுப் பிரிவின் தகவல்களைப் பயன்படுத்தி உ.வி.சு. ஐக் கணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் உற்பத்திப் பிரிவின் சிறந்த வெளியீட்டுடனான சர்வதேசத் தர வகையின் 4 இலக்கங்களைக் கொண்ட விடயம் தெரிவு செய்யப்பட்டு பொருளாதார நிறுவனங்களுக்கு நிறையிடல் வேலைகள் முடிவுறுத்தப்பட்டது.

### 2.2.7 சில்லறை விலைகளும் உற்பத்தியாளர் விலைகளும்.

பொருள்களினதும் ஏனைய நானாவிதப் பண்டங்களினதும் சில்லறை விலைகள் சகல மாவட்டங்களில் உள்ள நகரங்களில் வாராந்த, மாதாந்த, காலாண்டு அடிப்படையில் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வெளிக்கள புள்ளி விபர ஆளணியினர் மூலம் சேகரிக்கப்படுகிறது.

2013 இற்கான நகர சில்லறை விலைகள் கணித்தல் மற்றும் உற்பத்தியாளர் விலை கணித்தலின் சேகரிப்பதற்கான படிவம் திருத்தஞ் செய்யப்பட்டதுடன், விலை சேகரிப்பு விடயங்களின் எண்ணிக்கையும் தேசிய கணக்குகள் பிரிவின் தேவைக்கேற்ப அதிகரிக்கப்பட்டது.

2012 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையான கொழும்பு மாவட்டத்தின் வாராந்த சில்லறை விலைகளின் 21வது பதிப்பு அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

### 2.2.8 அரச சார்புத்துறை வேலைவாய்ப்புப் புள்ளிவிபரங்கள்

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31ஆம் திகதியன்று உள்ள பணியாளர் எண்ணிக்கை சம்பந்தமான தகவல்கள் இங்கு சேகரிக்கப்படுகின்றது. 2011 இற்கான தரவு அட்டவணைகள் திணைக்கள வெளியீடுகளில் பிரசுரிப்பதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் 2012 இற்குரிய தரவுகள், உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### 2.2.9. பயிற்சி நடவடிக்கைகள்

பயிற்சிப் பிரிவின் ஊடாக 2013 இற்குரிய சில பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டதுடன் 33 உத்தியோகத்தர்களின் பங்களிப்புக் கூட்டுத் திட்டம், செயற்திட்டம் மற்றும் நிறைவேற்றுகை அறிக்கை என்பன சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. திணைக்கள உத்தியோகத்தர்களின் தமிழ் மொழி அறிவை விருத்தி செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் சிறந்த முறையில் செயற்படுவதுடன் அது படிநிலை ரீதியாக 3 பயிற்சி வகுப்புக்களைக் கொண்டுள்ளது. தமிழ்மொழிப் பயிற்சியின் மட்டம் iii இலிருந்து மட்டம் I வரை, தமிழ்ப் பயிற்சி மட்டம் iii மற்றும் தமிழ் மொழிப் பயிற்சி மட்டம் ii என்பன இம் மூன்று பயிற்சி வகுப்புகளாகும்.

கல்விச் சுற்றுலாவிற்காக இலங்கைக்கு வருகை தந்த 10 நேபாள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டதுடன் அங்கு அங்குரார்ப்பன வைபவத்திலிருந்து இறுதித் தினத்தன்று சான்றிதழ் வழங்கும் வைபவம் வரை ஒழுங்கான முறையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

புள்ளிவிபரவியலாளர்கள், புள்ளிவிபர உதவியாளர்களுக்கான வினைத் திறன் தடைகாண் பரீட்சை உரிய நேரத்தில் நடத்தப்பட்டதுடன் அடிப்படை கணனிப் பயிற்சி, page maker பயிற்சி நெறி, இன்வென்ரறிப் பொருட்கள் சம்பந்தமான பயிற்சி, Adobe Flash ஐப் பயன்படுத்தி உயர் பல்லூடக அபிவிருத்திப் பயிற்சி நெறி ஆகியன உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்டது.

### 2.2.10 தகவற் தொடர்பாடல், தொழில்நுட்ப நடவடிக்கைகள்

திணைக்களத்தால் நடத்தப்படும் தொகைமதிப்புக்கள், அளவீடுகளைத் தரவு வகைப்படுத்தல், சில அமைச்சுகள் மற்றும் ஏனைய திணைக்களங்களிலுள்ள புள்ளிவபரப் பிரிவுகளுக்குரிய தரவு வகைப்படுத்தல் என்பன தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது. இலங்கைத் தொழிற்பல அளவீடு, குடித்தன வருமான, செலவின அளவீடு 2012/13, குடித்தன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2011, 5% மாதி, கணக்கெடுப்புக்குப் பின்னரான அளவீடு - 2012 இற்குரிய தரவுகளின் வகைப்படுத்தல் வேலைகள் என்பன இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்டது முக்கிய சில வேலைகளாகும். அத்துடன், தொழிற் திணைக்களம், இலங்கை சுங்கம், பதிவாளர் நாயகம் திணைக்களம், வைத்தியப் புள்ளிவிபரப் பிரிவு அடங்கலாக ஏனைய அரச திணைக்களங்களில் அமைந்துள்ள புள்ளிவபரப் பிரிவுகளினூடாக சேகரிக்கப்படும் தரவுகளின் வகைப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டது. திணைக்களத்தால் சேகரிக்கப்படும் புள்ளிவிபரத் தகவல்களை வழங்குதல் ம்றறும் தகவல்களை விரைவில் வெளியிடுதல் போன்ற ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் வகையில் தரவுப் பாவனையாளர்களுக்குப் பயனுள்ள முறையில் இணையத் தளத்தில் வெளியிடுதல், தேடல் இயந்திரத்தை மேம்படுத்தல் என்பனவும் இப்பிரிவுக்குப் பொறுப்பான வேலைகளாகும். மேலும் நுண்தரவுகள் வேண்டுவோருக்கு வெளியிடுதல், அவற்றை இற்றைப்படுத்தல், மற்றும் திணைக்கள வெளியீட்டு இறுவெட்டுக்களை தயாரித்தல் என்பவற்றையும் மேற்கொள்வதுடன் பிரிவுகளின் தனிப்பட்ட கணனிகளைத் திருத்துதல் மற்றும் பழுது பார்த்தலையும் வலைப்பின்னல் முறையை நிறுவுதலையும் இப்பிரிவு மேற்கொள்கிறது.

### 2.2.11 வெளியீட்டு நடவடிக்கைகள்

புள்ளிவிபரத் தொகுப்பு, புள்ளிவிபரக் கையடக்கநூல், வருடாந்த நிறைவேற்றுகை அறக்கை, வருடாந்த செயற்றிட்டம் என்பவற்றை அச்சிடல் மற்றும் வெளியிடல் என்பவற்றிற்கு வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாக உள்ளது.

2012 இற்கான தரவுகள் அடங்கலாக சகல வெளியீடுகளையும் அச்சிட்டு விநியோகிப்பதுடன் உரிய தரவுகளை இணையத்திலும் வெளியிடுகிறது. உள்ளூராட்சிப் புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்டு காலாண்டு மற்றும் வருடாந்த தரவுகளை உள்ளடக்கி அட்டவணை ஒன்று தயாரிக்கப்பவதுடன் அடிப்படைப் புள்ளிவிபரங்களைக் கொண்ட தரவுத்தாளும் மும்மொழிகளிலும் தயாரிக்கப்படுகின்றது. திணைக்களத்தால் வெளியிடப்படும் சகல வெளியீடுகளுக்கும் ISBN மற்றும் ISSN இலக்கம் பெறுதல், அவ்வெளியீட்டுக்கான விலைகள் நிர்ணயித்தல், என்பனவும் இப்பிரிவால் மேற்கொள்ளப்படுவதுடன் வெளியிடப்படும் சகல வெளியீடுகளையும் தாமதமின்றி விநியோகித்தலையும் மேற்கொள்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் நடத்தப்பட்ட தயட்ட கிருல - 2013 கண்காட்சிக்கான காட்சிக் கூடத்தின் பொருட்டு வினாக்கொத்து தயாரிக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டது.

### 2.2.12 அச்சிடல் நடவடிக்கைகள்

இத்திணைக்களத்தின் அச்சிடல் பிரிவு, திணைக்களத்தால் நடத்தப்பட்ட தொகைமதிப்புக்கள், அளவீடுகள் சம்பந்தமான அட்டவணைகள், வினாக்கொத்துக்கள், அறிவுறுத்தற் கைநூல்கள், அறிக்கைகள் என்பவற்றை அச்சிடும் வேலைகளுக்குப் பொறுப்பாக உள்ளது.

பின்வரும் வெளியீடுகள் 2013 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டன.

- இலங்கைத்தொழிற்பல அளவீடு -2010 சிங்கள அறிக்கை
- புள்ளிவிபரத் தொகுப்பு
- குடித்தன வருமான, செலவின அளவீடு 2009/10 அறிக்கை (சிங்களம்)
- வெளிக்கள நாட்குறிப்பேடு - 2013
- இலங்கைத் தொழிற்பல அளவீடு 2012- 2ஆம் காலாண்டு அறிக்கை
- புள்ளிவிபரக் கையடக்க நூல் - 2012
- பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14 கைத்தொழில் சந்தைகளை பட்டியலிடும் படிவம்
- வருடாந்த நிறைவேற்றுகை அறிக்கை - 2012
- LLRC தொகைமதிப்புக்கான சகல மாதிரிப் படிவங்கள்
- வெளிக்கள நாட்குறிப்பேடு - 2014

### 2.2.13 வரைபட நடவடிக்கைகள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளின் பேரில் 2011 குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பின் கி.உ.பிரிவு ரீதியான அடிப்படைக் குடிசனத் தகவல்கள் அடங்கலாக 25 மாவட்டங்களுக்கான வரைபட நூல் ஒன்று தயாரிக்கப்பட்டு அவ்வமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

2011 குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்புக்காக தயாரிக்கப்பட்ட கி.உ. பிரிவு வரைபடத்தை டிஜிட்டல்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது காலி, மாத்தறை மாவட்டங்களுக்கான கி.உ.பிரிவு வரைபடம் டிஜிட்டல் படுத்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

### 2.2.14 தரவுப் பரம்பல் நடவடிக்கைகள்

பாராளுமன்றத்திற்கும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் தேவையான தரவுகளை வழங்குதல், தரவுப் பரம்பல் பிரிவின் பொறுப்பாகும். தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் நுண்தரவுக் கோப்புகளை வழங்குதல், விநியோகக் கொள்கையின்படி 25% தரவுகள் மற்றும் பூரண தரவுக் கோப்புக்கள்

வேண்டுவோரிற்கு கையளிக்கப்படுகின்றது. அதன்படி 2013 இற்காக 25% தரவுக் கோப்புக்கள் 36 உம் பூரணத் தரவுக் கோப்புக்கள் 24 உம் வெளியிடப்பட்டது.

### 2.2.15 நூலகம்

இரவல் வழங்கல் மற்றும் படித்தற் பகுதிகளைக் கொண்ட திணைக்கள நூலகத்தில் விவசாயம், கணனி விஞ்ஞானம், மக்களியல் பொருளியல், மனித வளங்கள், கைத்தொழில், முகாமை, கணிதம், தேசிய கணக்குகள், விலைகள், வர்த்தகம், கூலி போன்ற விடயங்களைக் கொண்ட நூல்கள் காணப்படுகின்றன. சகல புத்தகங்களும் DDC 21 வது பதிப்பின்படி உரிய விடயங்கள் தீர்மானிக்கப்பட்டு வகை இலக்கமிடப்பட்டது. நூலகத்தின் கணனிப்படுத்தல் நடவடிக்கைகள் இணைய அடிப்படையிலான தன்னிசைவு நூலக வேலைத்திட்டத்தின் கீழ் முறைப்படி செய்யப்படுகின்றது.

2013 இல் அம்பாறையில் நடைபெற்ற தயட்டகிருல காட்சியின் போது திணைக்கள நூலகத்தின் புத்தகங்களை உள்ளடக்கிய வெளியீடுகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. திணைக்கள உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில் பத்திரிகையாளர்களிற்கு திணைக்களத்தின் சேவைகளைத் தெரியப்படுத்தம் வேலைத்திட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

### 2.2.16 வெளிக்கள முகாமை நடவடிக்கைகள்

மாவட்டபுள்ளிவிபரப் பிரிவுகள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கிடையில் இணைப்பை ஏற்படுத்தி மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுகளுக்குத் தேவையான நிதியங்கள், பௌதீக வசதிகள், பல்வேறு படிவங்களை வழங்குதல், வெளிக்கள முகாமைப் பிரிவின் பொறுப்பாகும். இதன் பொருட்டு 6 மாதங்களுக்கொருமுறை எரிபொருள், சாரதிகளின் பட்டா, மேலதிக நேரக் கொடுப்பனவு என்பன வழங்குவதற்கான ஏற்பாடுகள் மற்றும் மாவட்டத் தலைவர்கள், கள உத்தியோகத்தர்களின் மாதாந்த பயணச் செலவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டன.

மாவட்டப் பிரிவுத் தலைவர்களின் வருடாந்தப் பயிற்சிப் பட்டறை மற்றும் வருடாந்த மக்களியல், கைத்தொழில் மற்றும் விவசாயக் குழுக் கூட்டத்தினை இவ்வருடத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டபோதிலும் பொருளாதாரத் தொகைமதிப்பு அடங்கலாக ஏனைய தொகைமதிப்பு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டமையால் மேற்படி கூட்டத்திற்கு உத்தியோகத்தர்களை இணைக்க இயலாமையால் அதனை மேற்கொள்ள இயலவில்லை.

## 2.3 சில அமைச்சுகள், திணைக்களங்களிலுள்ள திணைக்கள கிளை அலுவலகங்களில் நடாத்தபட்ட தொகைமதிப்புகளும் அளவீடுகளும்

### 2.3.1 வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு

நாடு முழுவதுமுள்ள அரச சார்பு மற்றும் தனியார் துறைகளிலுள்ள ஊழியர் சேமலாப நிதிக்குப் பங்களிப்பு வழங்கும் வர்த்தக, சேவைகள் நிறுவனங்கள் சம்பந்தமாக வருடத்தின் யூன் மாத வேலைநாட்களின் அடிப்படையில் தகவல்கள் சேகரிக்கப்படுகிறது.

இவ்வளவீட்டுத் தகவல்கள், படைகளின் படியாக விகிதாசாரமாகத் தெரிவு செய்யப்பட்ட மாதிரியின் அடிப்படையில் தபால் மூலமாக சேகரிக்கப்படுகிறது. இத்தகவல்களின் அறிக்கையின் ஊடாக நாட்டிலுள்ள

நிறுவனங்களின் வேலைவாய்ப்புகள், கைத்தொழில் வகுப்பாக்கம் மற்றும் ஏனைய தகவல்கள் வருடாந்தம் வெளியிடப்படுகிறது.

மேற்படி அளவீட்டின் 2012 வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு அச்சிடலுக்காக்க் கையளிக்கப்பட்டதுடன் 2013 அறிக்கை தயாரிப்பு வேலை முடிவடைந்த போதிலும் அச்சிடல் வேலைகள் 2014 முதலாம் காலாண்டில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.3.2 சராசரி உழைப்புகள், வேலை மணித்தியாலங்கள் சம்பந்தமான அளவீடு

வருடத்துக்கு இரு முறை அஞ்சல் மூலமாக நடாத்தப்படும் அளவீடானது, ஒவ்வொரு வருடமும் மார்ச், செப்டெம்பர் மாதங்களில் நடாத்தப்படுகிறது. இந்த அளவீட்டின் முக்கிய நோக்கம் கூலி சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களின் சராசரி உழைப்புக்கள், செய்த வேலை மணித்தியாலங்கள் சம்பந்தமான தரவுகளை சேகரித்தலாகும். பெறப்படும் தகவல்கள் " உண்மையான வேலைசெய்த, சராசரி உழைப்புக்களின் மணித்தியாலம் சம்பந்தமான அளவீடு" இன் மூலமாக வெளியிடப்படுவதுடன் இது உழைப்பின் போக்குகளை விபரிக்கின்றது.

### 2.3.3 கல்விப் புள்ளிவிபரங்கள்

கல்வி அமைச்சிலுள்ள புள்ளிவிபரங்களினூடாக வருடாந்தம் மேற்கொள்ளப்படும் பாடசாலைத் தொகைமதிப்புடன் தனியார் பாடசாலைகள், பிரிவேனாக்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் தேசிய கல்வியியற் கல்லூரிகள் என்பன சம்பந்தமான தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன. வருடாந்தம் வெளியிடப்படும் ஆரம்பத் தொகைமதிப்பு அறிக்கை தயாரிக்கப்படுவதுடன் அவை அடுத்த வருட முதல் காலாண்டில் இணையத் தளத்தில் வெளியிடத் தேவையான ஆய்வுக் கல்வித் தரவுகள் வழங்க எதிர் பார்க்கப்படுகின்றது.

### 2.3.4 வைத்தியப் புள்ளிவிபரங்கள்

சுகாதார அமைச்சிலுள்ள புள்ளிவிபரக் கிளை அலுவலகம், உள்நோயாளர், வெளிநோயாளர், பல், மகப்பேற்று விடயங்கள், மரணங்கள், வைத்தியசாலைக் கட்டில்கள், வைத்திய ஆளணி, சுகாதார வசதிகள் சம்பந்தமான புள்ளிவிபரங்களை சேகரிப்பதிலும் பேணுவதிலும் ஈடுபட்டு வருகிறது. மருத்துவ சுகாதார உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக சனத்தொகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டது.

2011, 2012 வருடங்களுக்காக ஒவ்வொரு நிறுவனங்களிடமிருந்தும் பெற்ற தரவுகள் கணனிப்படுத்தப்பட்டதுடன் தரவுகள் ஆய்வு செய்யும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. 2010 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இளைய அடிப்படை முறையிலான தரவு செகரிப்பு நிகழ்ச்சித் திட்டம் இவ்வருடத்தில் விரிவாக்கப்பட்டது.

அதன் பொருட்டு 26 பிரதேச சுகாதார சேவை நிலையங்களின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தனித்தனியாக நடாத்தப்பட்டதுடன், அப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முடிவுற்றதும் 98 அரச வைத்திய சாலைகள் இவ்வேலைத் திட்டத்தில் பதிவு செய்யப்பட்டு உரிய தரவுகளை இணையத்தின் மூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.3.5 வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள்

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் புள்ளிவிபரப் பிரிவானது, பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற வாழ்நிலைப் புள்ளிவிபரங்களை சேகரிப்பதற்குப் பொறுப்பாக உள்ளது. 2009 இற்கான பிறப்பு, இறப்புகளுக்கான தரவுகளின் வகைப்படுத்தல் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் இறுதித் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன. 2010 இற்கான தரவுகளின் கணனிப்படுத்தல் வேலைகள் முடிவடைந்ததுடன் தரவு பதிப்பித்தல் மற்றும் குறைவான தரவுகளைப் பெறுதல் என்பன மேற்கொள்ளப்பட்டன. *2012* இற்குரிய வாழ்நிலைப் புள்ளிவிபரங்களின் சுட்டெண் தயாரிப்பு வேலைகள் முடிவடைந்து *2013* இற்கான வயதுப் பிரிவு மற்றும் மாவட்ட ரீதியாக நட்டாண்டு சனத்தொகை கணித்தல் பூர்த்தியடைந்துள்ளது.

### 2.3.6 கடற்றொழில் புள்ளிவிபரங்கள்

கடற்றொழில், நீரியல் வள அமைச்சின் புள்ளிவிபரக் கிளையானது, மாவட்ட ரீதியாக கடல்மீன், நன்னீர் மீன் உற்பத்திகள், மீன்களின் மொத்த, சில்லறை விலைகள், மீனின் இறக்குமதியும் ஏற்றுமதியும், மீன் உற்பத்திகள் என்பன சம்பந்தமான தரவுகளை சேகரிக்கும் பணியை தொடர்ந்து மேற்கொண்டது. கடற்றொழில் புள்ளிவிபரங்கள் 2013 இன் தயாரிப்பு வேலைகள் முடிவுற்றன.

அத்துடன் 2013 இற்கான திணைக்கள வெளியீடுகள், மத்திய வங்கி அறிக்கைகள், சர்வதேச நிறுவனங்களுக்குத் தேவையான தரவுகளை வழங்கும் வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டன.

### 2.3.7 ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண்

கூலிகள் சபையின் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழில் திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்ட ஆக்க் குறைந்த கூலிகளின் அடிப்படையில் மாதாந்தம் ஆக்க்குறைந்த கூலி வீதச் சுட்டெண் கணிக்கப்படுகின்றது. இச் சுட்டெண் விவசாயம், (பெருந்தோட்டத்துறை) கைத்தொழில், வாணிபம், சேவைகள் போன்ற பிரதான துறைகளுக்குத் தனித்தனியாகவும் கூட்டாகவும் கணிக்கப்படுகின்றது. அத்துடன் இச்சுட்டெண்களின் மூலம் பிரதான துறைகளிலுள்ள ஆக்க் குறைந்த கூலி மட்டங்களின் மாற்றங்கள் அளவிடப்படுகின்றன. *2013* ஜனவரி - டிசம்பர் வரையான மாதங்களுக்கான ஆகக்குறைந்த கூலி வீதச் சுட்டெண்ணின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### 2.3.8 தொழிற் புள்ளிவிபரங்கள் சம்பந்தமான வெளியீடு - 2013

2013 இற்கான தொழிற் துறையின் பல்வேறு தரவுகளைக் கொண்ட வருடாந்த வெளியீடு, தொழில் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டதுடன் அவற்றை அச்சிட்டு வெளியிடுவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

### 2.3.9 சுங்கப் புள்ளிவிபரங்கள்

சுங்க அறிக்கைகளிலிருந்து பெற்ற தகவல்களின் அடிப்படையில் ஏற்றுமதி, இறக்குமதித் தரவுகள் சேகரித்தல், வகைப்படுத்தல், ஆய்வு செய்தல், வெளியிடல் என்பன இலங்கைச் சுங்கத் திணைக்களத்திலுள்ள புள்ளிவிபரப் பிரிவின் பொறுப்பாகும். ஏற்றுமதி, இறக்குமதி சம்பந்தமான மாதாந்தத் தரவுகளைக் கொண்ட கணனிக் குறிப்புத் தாள்கள், அரச நிறுவனங்களுக்கும் ஏனைய தரவுப் பாவனையாளர்களுக்கும் அவர்களின் வேண்டுகோளின் பேரில் விநியோகிக்கப்பட்டது.

வெளிநாட்டு வர்த்தகம் சம்பந்தமான *2012* க்கான வருடாந்த அறிக்கை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதுடன் வெளிநாட்டு வர்த்தகம் சம்பந்தமான புள்ளிவிபரக் கைநூலை அச்சிடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 3 நிர்வாகம்

## 3.1 பிரிவுகள், கிளை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்

### 3.1.1 பிரிவுகளும் அலகுகளும்

2013 ஆம் ஆண்டு பின்வரும் 15 தொழில்நுட்ப, சேவைகள் பிரிவுகளுடன் மேலதிக *மூன்று* பிரிவுகளும் செயற்பாட்டில் இருந்தன.

பிரிவு 1 - குடிசனத் தொகைமதிப்பும் மக்களியலும்
பிரிவு 2 - கைத்தொழில், நிர்மாணம், வர்த்தக, சேவைகள்
பிரிவு 3 - விவசாயமும் சுற்றாடலும்
பிரிவு 4 - தேசிய கணக்குகள்
பிரிவு 5 - வெளியீடுகள்
பிரிவு 6 - நூலக ஆவணமாக்கல்
பிரிவு 7 - தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பவியல்
பிரிவு 8 - நிர்வாகமும் கணக்கியலும்
பிரிவு 9 - மாதிரி அளவீடுகள்
பிரிவு 10 - அச்சிடல்
பிரிவு 11 - வெளிக்கள முகாமைத்துவம்
பிரிவு 12 - புள்ளிவிபரப் பயிற்சி
பிரிவு 15 - ஆராய்ச்சியும் விஷேட கற்கைகளும்
பிரிவு 16 - விலைகளும் கூலிகளும்
பிரிவு 18 - வரைபடங்கள்
சர்வதேச புள்ளிவிபரப் பிரிவு
தரவுப் பரம்பற் பிரிவு
LLRC தொகைமதிப்புப் பிரிவு

### 3.1.2 அமைச்சுக்கள், திணைக்களங்களில் உள்ள கிளை அலுவலகங்கள்

இத்திணைக்களம் பல்வேறு முக்கிய அமைச்சுக்கள், திணைக்களங்களில் 43 கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இக்கிளைகள் ஒவ்வொன்றும் பிரதிப் பணிப்பாளர், சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர், புள்ளிவிபரவியலாளர் அல்லது புள்ளிவிபர உத்தியோகத்தர் அல்லது புள்ளிவிபர உதவியாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது.

### 3.1.3 மாவட்ட அலுவலகங்கள்

மாவட்டச் செயலகங்களிலுள்ள *25* மாவட்ட அலுவலகங்களையும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் *"எச்"* பிரதேசத்தில் கல்நெவாவில் ஒரு அலுவலகத்தையும் இத் திணைக்கம் கொண்டுள்ளது. இவைகள் ஒவ்வொன்றும் பிரதிப் பணிப்பாளர், சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர், அல்லது புள்ளிவிபரவியலாளர் பொறுப்பில் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள் மற்றும் புள்ளிவிபர உதவியாளர்களின் உதவியுடன் இயங்குகின்றன .பல்வேறு பிரதேசச் செயலாளர் பிரிவு மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும்

புள்ளிவிபரத் தகவல்கள் சேகரித்தல், தொகுத்தல், ஒன்றிணைத்தல் போன்ற பொறுப்புகள் இந்த மாவட்ட அலுவலகங்களைச் சார்ந்துள்ளது.

### 3.1.4 மாகாண சபைகளில் உள்ள புள்ளிவிபர ஆளணியினர்

தொழில்சார் புள்ளிவிபர ஆளணியினரை அமர்த்துவதன் மூலம் மாகாண சபைகளிற்கு புள்ளிவிபரச் சேவைகளை மாகாண சபைகளுக்கு *வழங்குதல் தொடரப்பட்டது.* தற்காலிகமாகப் புள்ளிவிபர ஆளணியினரை மாகாண சபைகளுக்கு இணைப்பதற்கான ஒழுங்குகள் மாகாண சபைகளுடன் செய்யப்பட்டன. இவ்வொழுங்குகள் புள்ளிவிபரக் கூட்டிணைப்பையும் புள்ளிவிபரத் தரத்தை பராமரித்தலையும் ஆளணியினரை பகிர்ந்தளித்தலையும் உறுதி செய்தன.

## 3.2 ஆளணியினர்

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | 31.12.2013 இல் வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (புள்ளிவிபரம்/ தகவல் தொழில்நுட்பம்) | 3 | 0 | 3 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) | 1 | 1 | 0 |
| பணிப்பாளர் (புள்ளிவிபரம்) | 11 | 2 | 9 |
| பணிப்பாளர் (ICT) | 1 | 0 | 1 |
| கணக்காளர் சேவை | 4 | 3 | 1 |
| பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரம்) | 23 | 9 | 14 |
| பிரதிப் பணிப்பாளர் (ICT) | 4 | 1 | 3 |
| உதவிப் பணிப்பாளர் (ICT) | 19 | 10 | 9 |
| உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) இ.நி.சே. 111 | 1 | 1 | 0 |
| சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் | 80 | 35 | 45 |
| புள்ளிவிபரவியலாளர் | 110 | 67 | 43 |
| அச்சக முகாமையாளர் | 1 | 1 | 0 |
| அரச முகாமை உதவியாளர் சேவை (அதிவிசேடம்) | 1 | 1 | 0 |
| புள்ளிவிபரப் பட வரைஞர் | 1 | 1 | 0 |
| நூலகவியலாளர் சேவை | 6 | 2 | 4 |
| மொழிபெயர்ப்பாளர் | 3 | 2 | 1 |
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | 488 | 343 | 145 |
| புள்ளிவிபர உதவியாளர் | 213 | 202 | 11 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 80 | 64 | 16 |
| வரவு செலவுத் திட்ட உதவியாளர் | 1 | 0 | 1 |
| இலங்கை தொழில்நுட்ப சேவை II பிரிவு ஆ (வரைபடம்) | 1 | 1 | 0 |

| | | | |
|---|---|---|---|
| மேற்பார்வையாளர் (அச்சிடல்) | 1 | 0 | 1 |
| முறைக் கட்டுக்காப்பாளர் | 8 | 2 | 6 |
| சிரேஸ்ட முறை இயக்குனர் | 11 | 4 | 7 |
| சிரேஸ்ட முறைபதிவேடு காப்பாளர் | 1 | 0 | 1 |
| தரவுக் கட்டுப்பாட்டாளர் | 5 | 0 | 5 |
| தகவல் தழில்நுட்ப சேவை III | 149 | 149 | 0 |
| அரச முகாமை உதவியாளர் சேவை | 200 | 109 | 91 |
| முறை இயக்குனர் | 4 | 0 | 4 |
| முறைப் பதிவேடு காப்பாளர் | 1 | 0 | 1 |
| உதவித் தரவு கட்டுப்பாட்டாளர் | 12 | 3 | 9 |
| தரவுப் பதிவு இயக்குனர் | 52 | 21 | 31 |
| தரவுப் பதிவு இயக்குனர்/ குறியீட்டு எழுதுனர் | 156 | 122 | 34 |
| தமிழ்மொழி மூல எழுதுனர் | 20 | 14 | 6 |
| எழுத்து கோர்ப்பவர் | 1 | 1 | 0 |
| போர்மன் (அச்சிடல்) | 2 | 0 | 2 |
| கொம்டோ மீட்டர் இயக்குனர் | 3 | 1 | 2 |
| வகைப்படுத்தும் கையாள் | 1 | 0 | 1 |
| வெரிரைப்பர் ஹெட்லைனர் | 1 | 1 | 0 |
| புகைப்படக்கருவி இயக்குனர் | 2 | 1 | 1 |
| புத்தகம் கட்டுபவர் (அச்சிடல்) | 5 | 1 | 4 |
| கிலட்டின் இயந்திர இயக்குனர் | 2 | 1 | 1 |
| லிதோ இயந்திர இயக்குனர் | 3 | 1 | 2 |
| திருத்த அச்சுப் பிரதி வாசிப்பவர் | 1 | 0 | 1 |
| தகடு ஆக்குனர் | 1 | 1 | 0 |
| லே அவுட்மன் | 1 | 0 | 1 |
| பொறி உதவியாளர் | 2 | 2 | 0 |
| சாரதி | 55 | 54 | 1 |
| குளிரூட்டி இயந்திர இயக்குனர் | 2 | 1 | 1 |
| பொறிப்பிரிவு ஊழியர்கள் | 3 | 0 | 3 |
| அலுவலக உதவியாளர் சேவை (நிரந்தரம்) பாதுகாப்பு உத்தியோகத்தர் அடங்கலாக | 107 | 102 | 5 |
| அலுவலக உதவியாளர் சேவை (திணைக்கள) | 10 | 10 | 0 |
| **மொத்தம்** | **1875** | **1348** | **527** |
| பட்டதாரிப் பயிலுனர் | - | 5 | - |

## 3.3 மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றியோர் - 2013

| | | |
|---|---|---|
| 1. | திருமதி.ஐ.ஆர்.பண்டார<br>பிரதிப் பணிப்பாளர் | 26வது குடிசனத் தொகைமதிப்பு மாநாடு.<br>மொங்கோலியா<br>2013.06.26 - 2013.06.28 |
| 2. | திரு.எஸ்.ஏ.எஸ்.பந்துலசேன<br>பணிப்பாளர் | 26வது குடிசனத் தொகைமதிப்பு மாநாடு.<br>மொங்கோலியா<br>2013.06.26 - 2013.06.28 |
| 3. | திரு.பி.எம்.ஆர்.பெர்னாண்டோ<br>பிரதிப் பணிப்பாளர் | தகவற் தெழில்நுட்ப முகாமை சம்பந்தமான பிரதான தகவல் உத்தியோகத்தர்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.<br>சிங்கப்பூர்<br>2013..01.14 - 2013.01.25 |
| 4. | திரு.எஸ்.ஏ.எஸ்.பந்துலசேன<br>பணிப்பாளர் | புள்ளிவிபரத் தகவல் முறைமை சம்பந்தமான கூட்டு யுனிசெப்/எஸ்கப் கூட்டம்.<br>தாய்லாந்து<br>2013.04.23 - 2013.04.25 |
| 5. | திரு.எச்.எஸ்.வனசிங்ஹ<br>பணிப்பாளர் | RDTA-7507: 2011 ICP மதிப்பீட்டின் ஆசிய, பசுபிக் மதிப்பீட்டிற்கான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்.<br>மலேசியா<br>2013.03.14 - 2013.03.22 |
| 6. | திரு.ஏ.ஜி.எஸ்.காரியவசம்<br>புள்ளிவிபரவியலாளர் | RDTA-7507: 2011 ICP மதிப்பீட்டின் ஆசிய, பசுபிக் மதிப்பீட்டிற்கான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்.<br>மலேசியா<br>2013.03.14 - 2013.03.22 |
| 7. | திரு.டி.சி.ஏ.குணவர்தன<br>பணிப்பாளர் நாயகம் | ஐக்கிய நாடுகள் புள்ளிவிபர ஆணைக்குழுவின் 44வது செயலமர்வு, ஐ.நா. செயலகம், நியுயோர்க்.<br>ஐக்கிய அமெரிக்கா<br>2013.02.14 - 2013.03.01 |
| 8. | திரு.எச்.ஆர்.எல்.எஸ்.ரணதுங்க<br>புள்ளிவிபரவியலாளர் | தேசிய கணக்குகளுக்கான பிராந்திய பயிற்சிப் பட்டறை<br>ஐக்கிய அமெரிக்கா<br>2013.04.22 - 2013.04.26 |
| 9. | திரு.எஸ்.தனபாலசிங்கம்<br>சிரே. புள்ளிவிபரவியலாளர் | சர்வதேச பயிற்சிப்பட்டறை(தேசிய புள்ளிவிபர நிறுவனம், இந்தியா)<br>இந்தியா<br>2013.04.05 - 2013.04.06 |
| 10. | திருமதி.டி.டி.ஜி.ஏ.செனிவிரத்ன<br>உதவிப் பணிப்பாளர் | சிவில் பதிவு, வாழ்நிலைப் புள்ளிவிபரம் சம்பந்தமான மாநாடு.<br>தாய்லாந்து<br>2013.04.18 - 2013.04.19 |

| | | |
|---|---|---|
| 11. | திரு.டி.சி.ஏ.குணவர்தன<br>பணிப்பாளர் நாயகம் | இலங்கை நிதி, திட்டமிடல் அமைச்சு/ உபாய முகாமை அலுவலர்களுக்கான பயிற்சி, தேசிய பல்கலைக்கழகம்,சிங்கப்பூர்.<br>சிங்கப்பூர்<br>2013.03.18 - 2013.03.22 |
| 12. | திருமதி.வை.பி.ராஜபக்ஷ<br>புள்ளிவிபரவியலாளர் | அரச முகாமை முதுமானிக் கற்கை நிகழ்ச்சித்திட்டம்<br>மலேசியா<br>2013.04.02 - 2013.05.11 |
| 13. | திருமதி.சி.டி.டீ.சில்வா<br>சிரே. புள்ளிவிபரவியலாளர் | அலுவலகப் புள்ளிவிபர ஒருங்கிணைப்பு சம்பந்தமான ஐ.நா. பயிற்சிப் பட்டறை<br>ஜப்பான்<br>2013.04.16 - 2013.04.19 |
| 14. | கலாநிதி.ஏ.ஜே. சத்தரசிங்ஹ<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | விவசாய, கிராமியப் புள்ளிவிபரங்களுக்கான ஆசிய, பசுபிக் பிராந்திய நெறியாள்கைக்குழுவின் முதலாவது கூட்டம்.<br>தாய்லாந்து<br>2013.04.09 - 2013..04.10 |
| 15. | திரு.டபிள்.டபிள்.எஸ்.பிரேமகுமார<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | சமுகப் பாதுகாப்பை அளவிடுதல் சம்பந்தமான அபிவிருத்திப் பயிற்சிப்பட்டறை.<br>இந்தோனேசியா<br>2013.05.14 - 2013.05.16 |
| 16. | திருமதி.டீ.தீபவன்ஷ<br>புள்ளிவிபரவியலாளர் | சமுகப் பாதுகாப்பை அளவிடுதல் சம்பந்தமான அபிவிருத்திப் பயிற்சிப்பட்டறை<br>இந்தோனேசியா<br>2013.05.14 - 2013.05.16 |
| 17. | திருமதி.என்.எம்.கே.நவரத்ன<br>சிரே. புள்ளிவிபரவியலாளர் | IMF புள்ளிவிபர மதிப்பீடு தொடர்பில் காலாண்டுத் தேசிய கணக்கு மதிப்பிடல் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை<br>தாய்லாந்து<br>2013.05.27 - 2013..05.31 |
| 18. | திரு.எம்.ரி.ரி.சில்வா<br>புள்ளிவிபரவியலாளர் | IMF புள்ளிவிபர மதிப்பீடு தொடர்பில் காலாண்டுத் தேசிய கணக்கு மதிப்பிடல் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை.<br>தாய்லாந்து<br>2013.05.27 - 2013..05.31 |
| 19. | திரு.பி.ஏ.யு.வர்ணசிறி<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | IMF புள்ளிவிபர மதிப்பீடு தொடர்பில் காலாண்டுத் தேசிய கணக்கு மதிப்பிடல் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை.<br>தாய்லாந்து<br>2013.05.27 - 2013..05.31 |

| | | |
|---|---|---|
| 20. | திரு.பி.வை.எம்.செனவிரத்ன<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | IMF புள்ளிவிபர மதிப்பீடு தொடர்பில் காலாண்டுத் தேசிய கணக்கு மதிப்பிடல் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை.<br>தாய்லாந்து<br>2013.05.27 - 2013..05.31 |
| 21. | திருமதி.டபிள்.ஆர.மங்களிக்கா<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | IMF புள்ளிவிபர மதிப்பீடு தொடர்பில் காலாண்டுத் தேசிய கணக்கு மதிப்பிடல் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை.<br>தாய்லாந்து<br>2013.05.27 - 2013..05.31 |
| 22 | திரு.டபிள். ஏ.எஸ்.செனவிரத்ன<br>புள்ளிவிபர உதவியாளர் | IMF புள்ளிவிபர மதிப்பீடு தொடர்பில் காலாண்டுத் தேசிய கணக்கு மதிப்பிடல் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை.<br>தாய்லாந்து<br>2013.05.27 - 2013..05.31 |
| 23. | திரு.எச்.கே.டபிள்.ஹிடிபண்டார<br>சிரே. புள்ளிவிபரவியலாளர் | சீன சமுகப் பொருளாதார அபிவிருத்தியின் அடிப்படை அமிசம் சம்பந்தமான கருத்தரங்கு.<br>சீனா<br>2013.05.15 - 2013.06.04 |
| 24. | திருமதி.ஐ.ஆர்.பண்டார<br>பணிப்பாளர் | ஊனம் சம்பந்தமான நிபுணத்துவக் கூட்டம்.<br>சுவிஸர்லாந்து<br>2013.04.29 - 2013.04.30 |
| 25. | திரு.கே.எல்.சி.வீரசூரிய<br>உதவிப் பணிப்பாளர் (ICT) | நுண்தரவுப் பரம்பல் அளவீடு NADA4 சம்பந்தமான பிராந்திய பயிற்சிப்பட்டறை.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.06.25 - 2013.06.27 |
| 26. | திரு.பி.டீ.டீ.பீரிஸ்<br>முறைப்பகுப்பாளர்/<br>நிகழ்ச்சித்திட்டவியலாளர் | நுண்தரவுப் பரம்பல் அளவீடு NADA4 சம்பந்தமான பிராந்திய பயிற்சிப்பட்டறை.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.06.25 - 2013.06.27 |
| 27. | திருமதி.யு.மகேஸ்வரன்<br>பிரதிப் பணிப்பாளர் | கைத்தொழில் புள்ளிவிபரம் சம்பந்தமான சர்வதேச பயிற்சிப் பட்டறை.<br>சீனா<br>2013.07.08 - 2013.07..10 |
| 28. | திரு.டி.எம்.என்.பண்டார<br>சிரே. புள்ளிவிபரவியலாளர் | கைத்தொழில் புள்ளிவிபரம் சம்பந்தமான சர்வதேச பயிற்சிப் பட்டறை.<br>சீனா<br>2013.07.08 - 2013.07..10 |

| | | |
|---|---|---|
| 29. | திரு.ஜி.எஸ்.உடுவன<br>சிரேஸ்ட புளிவிபரவியலாளர் | விவசாய, கிராமிய புள்ளிவிபர மேம்பாட்டுக்கான முதலாவது பிராந்திய பயிற்சிப்பட்டறை.<br>கொரியா<br>2013.08.05 - 2013.08.09 |
| 30. | திரு.பி.பாலச்சந்திரன்<br>புள்ளிவிபரவியலாளர் | இளைஞர் சம்பந்தமாக திட்டமிடல், தீர்மானமெடுத்தலுக்காக குடிசனத் தொகைமதிப்புத் தரவுகளைப் பயன்படுத்தல் பற்றிய பயிற்சி.<br>யப்பான்<br>2013.07.22 - 2013.08.02 |
| 31. | திரு.டி.சி.ஏ.குணவர்தன<br>பணிப்பாளர் நாயகம் | ஆசிய பசுபிக் பிராந்திய சர்வதேச ஒப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2011, தேசிய அமுலாக்கல் முகவரகத் தலைவர்களின் கூட்டம்.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.08.13 |
| 32. | திருமதி.சுசந்த ரணதீர<br>பணிப்பாளர் | ஆசிய பசுபிக் பிராந்திய சர்வதேச ஒப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2011, தேசிய அமுலாக்கல் முகவரகத் தலைவர்களின் கூட்டம்.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.08.13 |
| 33. | திருமதி.குமாரி பிரேமலதா<br>சிரே.புள்ளிவிபவியலாளர் | அரசாங்க நிதியில் நிதி, திட்டமிடல் அமைச்சின் அலுவலர்களுக்கான பயிற்சி.<br>சிங்கப்பூர்<br>2013.07.29 - 2013.08.04 |
| 35. | திரு.எச்.எம்.என்.ஹென்னாயக்க<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | வர்த்தக, சுற்றுலாப் புள்ளிவிபரம் சம்பந்தமான சர்வதேச கருத்தரங்கு.<br>இந்தோனேஷியா<br>2013.10.07 - 2013.10.10 |
| 36. | திரு.எச்.ஆர்.எல்.ரணதுங்க<br>புள்ளிவிபரவியலாளர் | வர்த்தக, சுற்றுலாப் புள்ளிவிபரம் சம்பந்தமான சர்வதேச கருத்தரங்கு.<br>இந்தோனேஷியா<br>2013.10.07 - 2013.10.10 |
| 37. | திருமதி.பி.எச்.வல்பிட்ட<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | விவசாயப் புள்ளிவிபர மேம்பாட்டுக்கான வளங்களைக் கட்டியெழுப்புதல் சம்பந்தமான இரண்டாவது பயிற்சிப்பட்டறை;.<br>ஈரான்<br>2013.09.10 - 2013.09.17 |
| 38. | திரு.டி.சி.ஏ.குணவர்தன<br>பணிப்பாளர் நாயகம் | சிரேஸ்ட கொள்கை ஆக்கவியலாளர்கள், முகாமையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை - ஆசிய, பசுபிக் பிராந்திய சூழலுக்கான மதிப்பீடு.<br>தாய்லாந்து<br>2013.10.08 - 2013.10.10 |

| | | |
|---|---|---|
| 39. | எம்.டி.ரி.குமாரி<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | தெனமேற்கு ஆசிய கலாச்சார புள்ளிவிபரப்பயிற்சிப்பட்டறை.<br>இந்தியா.<br>2013.10.22.-2013.10.25 |
| 40. | திரு.ஜே.எஸ்.பி.தர்மவர்தன<br>சிரே. புள்ளிவிபரவியலாளர் | STAT உடனான புள்ளிவிபர ஆய்வு.<br>ஜெனீவா<br>2013.10.02 - 2013.10.11 |
| 41. | திருமதி.டபிள்.ஏ.ஆர.எல்.வலிவிட்ட<br>முறைப்பகுப்பாய்வாளர் | STAT உடனான புள்ளிவிபர ஆய்வு.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.10.21 - 2013.10.25 |
| 42. | திருமதி.ஆர்.கே.பி..ஜயதுங்க<br>முறைப்பகுப்பாய்வாளர் | STAT உடனான புள்ளிவிபர ஆய்வு.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.10.21 - 2013.10.25 |
| 43. | திரு.டி.பி.ஏ.திசானாயக்க<br>முறைப்பகுப்பாய்வாளர் | STAT உடனான புள்ளிவிபர ஆய்வு.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.10.21 - 2013.10.25 |
| 44. | திரு.ஜி.டபிள்.சுமணசிறி<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | STAT உடனான புள்ளிவிபர ஆய்வு.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.10.21 - 2013.10.25 |
| 45. | திரு.ஏ.டபிள்.எஸ்.பெரேரா<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | STAT உடனான புள்ளிவிபர ஆய்வு.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.10.21 - 2013.10.25 |
| 46. | திருமதி.டி.எம்.சமரவிக்ரம<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | STAT உடனான புள்ளிவிபர ஆய்வு.<br>பிலிப்பைன்ஸ்<br>2013.10.21 - 2013.10.25 |
| 47. | திருமதி.எஸ்.என்.பி.வனமாலி<br>புள்ளிவிபர உதவியாளர் | கிளஸ்டர் அபிவிருத்தி சம்பந்தமான சர்வதேச வர்த்தக நிகழ்ச்சித்திட்டம்.<br>இந்தியா<br>2013.11.11 - 2013.12.20 |
| 48. | திரு.டபிள்.எஸ்.டி.ஜயசுந்தர<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | கிளஸ்டர் அபிவிருத்தி சம்பந்தமான சர்வதேச வர்த்தக நிகழ்ச்சித்திட்டம்.<br>இந்தியா<br>2013.11.11 - 2013.12.20 |
| 49. | திரு.ஏ.ஜி.எஸ்.அம்பன்பிட்டிய<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | கிளஸ்டர் அபிவிருத்தி சம்பந்தமான சர்வதேச வர்த்தக நிகழ்ச்சித்திட்டம்.<br>இந்தியா<br>2013.11.11 - 2013.12.20 |
| 50. | திரு.எம்.எல்.ஏ.குணசேகர<br>சிரே. புள்ளிவிபரவியலாளர் | சுகாதார முகாமை முறை சம்பந்தமான கல்விச் சுற்றுலா.<br>தாய்லாந்து<br>2013.9.16 - 2013.9.18 |

| | | |
|---|---|---|
| 51 | கலாநிதி.ஏ.ஜே.சத்தரசிங்க<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | அலுவலகப் புள்ளிவிபரம் சம்பந்தமான சர்வதேசக் கருத்தரங்கு.<br>சீனா<br>2013.10.24 - 2013.10.26 |
| 52 | திருமதி.எஸ்.ஜெயகௌரி<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | தேசிய கணக்குகள் சம்பந்தமான ஆறாவது பிராந்தியப் பயிற்சி நெறி.<br>கொரியா<br>2013.10.14 - 2013.10.18 |
| 53 | திரு.செனரத் ராஜபக்ச<br>புள்ளிவிபர திட்டவியலாளர் | ஆசிய, பசுபிக் பிராந்திய அனர்த்தத் தரவு மேம்பாடு சம்பந்தமான நிபுணர் குழுக் கூட்டம்.<br>ஜப்பான்<br>2013.09.30 - 2013.10.01 |
| 54 | திருமதி.டி.டி.ஜி.ஏ.செனவிரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | ஆண் பெண் சமத்துவத்திற்கான புள்ளிவிபரக் கொள்ளவு அபிவிருத்தி.<br>தாய்லாந்து<br>2013.11.4 - 2013.11.5 |
| 55 | கலாநிதி.ஏ.ஜே.சத்தரசிங்க<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | விவசாய, கிராமிய புள்ளிவிபரம் சம்பந்தமான ஆசிய, பசுபிக் நாடுகளுக்கான பிராந்தியக் குழுக் கூட்டம்.<br>தாய்லாந்து<br>2013.11.01 - 2013.11 |
| 56 | திரு.ஆர்.எச்.எஸ்.அபேநாயக்க<br>பணிப்பாளர் | ஆசிய பசுபிக் பிராந்திய புள்ளிவிபர நிறுவனங்களுக்கான ஒன்பதாவது செயலமர்வு;<br>ஜப்பான்<br>2013.11.19 - 2013.11.22 |
| 57 | திரு.எச்.டபிள்.ஜயவீர<br>புள்ளிவிபரவியலாளர் | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.<br>கொரியா<br>2013.11.25 - 2013.11.28 |
| 58 | திருமதி. சி. பிரேமரத்ன<br>புள்ளிவிபரவியலாளர் | ஆசிய, பசுபிக் பிராந்திய குறிகாட்டிகள், ஆண் பெண் பிரிவுப் புள்ளிவிபரங்கள் சம்பந்தமான பிராந்திய பயிற்சிப் பட்டறை.<br>தாய்லாந்து<br>2013.11.04 - 2013.11.06 |
| 59 | திரு.டபிள்.ஜினதாச<br>புள்ளிவிபரவியலாளர் | 8வது JODI பயிற்சிப்பட்டறை.<br>மலேசியா<br>2013.10.28 - 2013.10.30 |
| 60 | திரு.கே.ஏ.எஸ்.கொடிகார<br>பிரதிப் பணிப்பாளர் | ஆண் பெண் சமத்துவத்திற்கான புள்ளிவிபரக் கொள்ளவு அபிவிருத்தி.<br>தாய்லாந்து<br>2013.11.4 - 2013.11.5 |

| | | |
|---|---|---|
| 61 | செல்வி.கே.கே.சி.சிரோமளி<br>சிரே. புள்ளிவிபரவியலாளர் | வாழ்நிலைப் புள்ளிவிபரங்களின் பாவனை சம்பந்தமான இரண்டாவது பயிற்சிப்பட்டறை.<br>கொரியா<br>2013.12.02 - 2013.12.06 |
| 62 | திரு.பி.எம்.பி.அனுர குமார<br>பணிப்பாளர் | ஆசிய, பசுபிக் பிராந்திய நாடுகளின் புள்ளிவிபர விருத்திக்கான வள மேம்பாடு சம்பந்தமான RAP பயிற்சிப்பட்டறை<br>இந்தியா<br>2013.12.02 - 2013.12.04 |
| 63 | திரு.எஸ்.தனபாலசிங்கம்<br>சிரே. புள்ளிவிபரவியலாளர் | ஆசிய பசுபிக் சூழற் புள்ளிவிபரங்களின் மேம்பாட்டுக்கான நிபுணர் குழுக் தாய்லாந்து<br>2013.12.09 - 2013.12.11கூட்டம். |
| 64 | திருமதி.டி.டி.ஜி.ஏ.செனவிரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | ஆசிய பசுபிக் பிராந்திய வாழ்நிலைப் புள்ளிவிபரங்களுக்கான பிராந்திய குழுக்களின் முதலாவது கூட்டம்.<br>தாய்லாந்து<br>2013.12.09 - 2013.12.11 |

## 3.4 பதவியுயர்வுகள், புதிய நியமனங்கள், விடுவிப்புகள், பதவி விலகல்கள், பதவி வெறிதாக்கல்கள் மற்றும் இளைப்பாறல்கள்

**பதவியுயர்வுகள்**

| | |
|---|---|
| சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர் | 01 |
| அரச முகாமை உதவியாளர் | 05 |
| அலுவலக உதவியாளர் சேவை | 01 |

**புதிய நியமனங்கள்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உதவியாளர் | 03 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 67 |
| தமிழ் மொழி மூல குறியீட்டு எழுதுனர் | 14 |

**விடுவிப்புகள்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | 03 |
| புள்ளிவிபர உதவியாளர் | 03 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 03 |
| அரச முகாமை உதவியாளர் | 02 |
| தரவுப் பதிவு இயக்குனர்குறியீட்டு எழுதுனர்/ | 05 |
| அலுவலக உதவியாளர் சேவை | 01 |

**பதவி விலகல்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | 01 |
| அரச முகாமை உதவியாளர் | 01 |

**இளைப்பாறல்கள்**

| | |
|---|---|
| பணிப்பாளர் | 03 |
| பிரதிப்பணிப்பாளர் | 01 |
| சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர் | 04 |
| புள்ளிவிபரவியலாளர் | 04 |
| சிரேஸ்ட முறைக்காப்பாளர் | 01 |
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | 05 |
| உதவிப் பணிப்பாளர்(ICT) | 01 |
| அரச முகாமை உதவியாளர் | 01 |
| தரவுப் பதிவு இயக்குனர் | 03 |
| உதவித் தரவுக் கட்டுக்காப்பாளர் | 02 |
| பொறிப்பிரிவு ஊழியர்கள் | 01 |
| சாரதிகள் | 01 |
| அலுவலக உதவியாளர் சேவை | 02 |

**இடமாற்றங்கள்**

| | |
|---|---|
| கணக்காளர் | 02 |
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | 35 |
| அரச முகாமை உதவியாளர் | 22 |
| தரவுப் பதிவு இயக்குனர்குறியீட்டு எழுதுனர்/ | 02 |
| சாரதிகள் | 15 |
| அலுவலக உதவியாளர் சேவை | 10 |

### 3.5 உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

2013 இற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்வு முகாமைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. திணைக்கள வேலைத்திட்டங்களின் வளர்ச்சியும் கணக்காய்வு விசாரணைகளும் காலாண்டுக் கணக்காய்வு முகாமைக் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டதுடன் அதற்குரிய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டன.

திணைக்களத்தின் பிரிவுகளில் லீவு மற்றும் வெளிச்செல்லும் பதிவேடுகளின் பதிவுமுறையைப் பரிசீலிக்கும் பொருட்டு சில பிரிவுகளின் மாதிரி தெரிவு செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்டது. அதிற் காணப்பட்ட குறைபாடுகளைக் கவனத்திற் கொண்டு வெளிச்செல்லுதல் சம்பந்தமான சுற்றறிக்கையின் திட்டவரைபு தயாரிக்கப்பட்டு மேலதிகப் பணிப்பாளர் நாயகம்(நிர்வாகம்) இடம் கையளிக்கப்பட்டது.

வவுச்சர் பரிசீலித்தலுக்கு மேலதிகமாக தாபனப் பிரிவின் செயலாற்றுகை அறிக்கை, உத்தியோகத்தர்களின் சுயவிபரக்கோவை மற்றும் தாபன நிர்வாகத்திற்கு உட்பட்ட நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டது.

## 4. நிதி அறிக்கை 2013

2013ம் ஆண்டுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம், அதன் ஏற்புடைய வரையறையின் கீழ் ரூபா 1,650,471,129(1650.47 மில்லியன்) ஆகும். மீண்டுவரும் செலவினம் ரூபா 637,500,000 (637.5 மில்லியன்) ஆகவும் மூலதனச் செலவினம் ரூபா 1,012,971,129(1,012.97 மில்லியன்) ஆகவும் இருந்தது. 'மீண்டுவரும் செலவினம் 2013" அட்டவணையின்படி உண்மையான மீண்டுவரும் செலவினம் ரூபா 632,400,029 (632.40 மில்லியன்) ஆக இருந்தது. "மூலதனச் செலவினம் 2013" இன்படி செலவழிக்கப்பட்ட உண்மையான மூலதனச் செலவினம் ரூபா 996,108,136 (996.10 மில்லியன்) ஆக இருந்தது.

மொத்தச் செலவினம் தேவைக்கேற்ப முறையே தனிநபர் வேதனாதிகளுக்கும் மீண்டுவரும் செலவினத்துக்கும் அனுப்பப்பட்டது. மதிப்பிடப்பட்ட செலவினத்துக்கும் உண்மையான செலவினத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் பின்வரும் வகையின் கீழ் இனங்காணப்பட்டு அதற்கான காரணங்களும் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

- வவுச்சர் சமர்ப்பித்தலில் ஏற்பட்ட தாமதம்
- பராமரிப்புச் செலவு குறைவடைந்தமை

மூலதனச் செலவினத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட செலவினத்துக்கும் உண்மைச் செலவினத்துக்கும் இடைப்பட்ட வேறுபாடுகள்

- திருத்தச் செலவு குறைவடைந்தமை
- வவுச்சர் சமர்ப்பித்தலில் ஏற்பட்ட தாமதம்

தலைப்பு 252 தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

நிகழ்ச்சித் திட்டம் 01 இயக்கச் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

கருத்திட்டம் 01 நிர்வாக, புள்ளிவிபரச் சேவை

### மீண்டுவரும் செலவினம் - 2013

| கருத்திட்டம் | வாக்குப் பணம் | 2013 மதிப்பிடப்பட்டது (ரூபா) | 2013 உண்மைச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| 1 | 1 தனிநபர் வேதனாதிகள் | 466,800,000 | 465,341,656 |
| | 2 ஏனைய மீண்டுவரும் செலவினம் | 170,700,000 | 167,058,373 |
| | **மொத்தம்** | **637,500,000** | **632,400,029** |

## மூலதனச் செலவினம் - 2013

| கருத்திட்டம் | வாக்குப் பணம் | 2013 மதிப்பிடப்பட்டது (ரூபா) | 2013 உண்மைச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| 1 | மூலதனச்செலவினம்<br>1. சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும் | 7,100,000 | 4,198,714 |
| | 2. மூலதனச் சொத்துக்களை உடமையாக்குதல் | 324,000,000 | 317,562,597 |
| | ஏனைய மூலதனச் செலவினம் | 681,871,129 | 674,346,825 |
| | **மொத்தம்** | **1,012,971,129** | **996,108,136** |

**அரசாங்க சேவைகளின் முற்பணக் கணக்கு(ஏ. பீ. ஏ. ஜீ. எஸ்.) 25201 - 2013**

| | அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ரூபா) | உண்மை எல்லை (ரூபா) |
|---|---|---|
| ஆகக் கூடிய வரவு எல்லை | 50,000,000 | 23,007,040 |
| ஆகக் குறைந்த பற்று எல்லை | 22,000,000 | 30,743,047 |
| ஆகக் கூடிய வரவு மீதி எல்லை | 215,000,000 | 132,251,858 |